**11.04.2018**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின் படி, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு வளைவு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நாமக்கல் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி வேண்டி மதிப்பீடுகள் தயார் செய்து பிரேரனை சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நினைவு வளைவு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நினைவு வளைவு அமைக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.1816/2018/இ1)

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சியில் சுற்றுலா 2018–19 மாநில நிதித் திட்டத்தின் கீழ் ரூ.25.00இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா தலங்கள் மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய புதிய கருத்துருக்கள் அனுப்ப கோரியதற்கிணங்க, கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்ததை தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் அணுகுசாலை அமைத்தல் | ரூ.25.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2776/2015/இ1)

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சியில் சுற்றுலா 2018–19 மாநில நிதித் திட்டத்தின் கீழ் ரூ.25.00இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலா தலங்கள் மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் செய்ய புதிய கருத்துருக்கள் அனுப்ப கோரியதற்கிணங்க, கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்ததை தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திருச்செங்கோடு நகராட்சி அருள்மிகு கைலாசநாதர் கோவில் அருகில் வாகன நிறுத்துமிடம் (Car Parking) மற்றும் புதிய கழிப்பிடம் அமைத்தல் | ரூ.25.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2776/2015/இ1)

**பொருள் எண்.4**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள 62.5KVA ஜெனரேட்டரில் உள்ள பழுதுகளை சரி செய்து வேறு இடத்தில் AC Sheet Shed போட்டு, Angle Bed Bolt மற்றும் Stage அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/– க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1795/2018/இ1)

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள 10KVA ஜெனரேட்டர் குடிநீர் பைப்லைன் பணி செய்யும் பொழுது அந்த வேலை செய்யும் இடத்திற்கு எடுத்து செல்ல Trally அமைத்தும்,ஜெனரேட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் எடுத்துசெல்வதற்கான Conveyance Charges வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1458/2018/இ2)

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வானகம் எண்.TN34 D3972, TN34 D3973, TN34 0518 ஆகிய மூன்று வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் 15.04.2018, 16.04.2018, 16.04.2018 ஆகிய காலங்களில் முடிவடைவதால் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு தொகை ரூ.108627/—ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுநிதியில் இருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1678/2018/எச்1)

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு 94 டம்பர் பின் பெட்டிகள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு வந்துள்ளது. அவற்றில் 30 பெட்டிகள் முழுவதுமாக பழுதடைந்துள்ளதால் 30 பெட்டிகளின் பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுசுகாதாரப் பிரிவின் அ வசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கவும், செலவினத் தொகை பொதுநிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1122/2018/எச்1)

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டு பகுதிகளில் இருந்து வரும் குப்பைகளில் என்னென்ன பொருட்கள் கலந்துள்ளது என்றும் அவற்றின் விகிதங்கள் எவ்வளவு என்பதை அறிக்கையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் கோரியுள்ளபடி மேற்கண்ட இனங்களின் மாதிரிகளை கோவையில் உள்ள தனியார் Green link labக்கு அனுப்பவும் அவர்கள் மூலம் மாதிரிகளை எடுத்து பகுப்பாய்வு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொதுசுகாதாரப் பிரிவின் அ வசர அவசியம் கருதி செலவினத் தொகை ரூ.20,000/—க்கும் பணி உத்தரவு வழங்கவும், பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1782/2018/எச்1)

**<u>பொருள் எண்.9</u>**

திருச்செங்கோடு நகராட்சி பகுதிகளில் தற்போது வரை 15783 குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை குடிநீர் இணைப்புகள் இல்லாத குடியிருப்புகளுக்கு புதியதாக 12761 குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் பகிர்மானக் குழாயிலிருந்து வீட்டிற்குள் குடிநீர் இணைப்புகளுக்கான குழாய் பொருத்தும் பணிக்காக ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மற்றும் பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 57/2018/இ2)

**<u>பொருள் எண்.10</u>**

இந்நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க சாலை பராமரிப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் விண்ணப்பதாரரிடமிருந்து வசூல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண்.748/2008/குவ2, நாள். 21.09.2009 சுற்றறிக்கையின் படி 2018–19 ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டவாறு 5% அதிகரித்து புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்புக் கட்டணம் 01.04.2018 முதல் நிர்ணயித்து கணினியில் பதிவேற்றம் செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Distance | WBM Road | BT Road | Cement Concrete Road |
|---|---|---|---|
| 0 to 30 | 1775 | 3579 | 4095 |
| 30 to 90 | 2893 | 4526 | 4988 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.87/2016/இ2)

**பொருள் எண்.11**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் உத்தரவுப்படி இந்நகராட்சி பகுதிகளில் வருகிற ஜுலை 2018க்குள் புதியதாக 12761 குடிநீர் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் படி வாரம் 709 குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளது. மேலும் திருச்செங்கோடு நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு வசூலிக்கப்படும் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகையான ரூ.6000/– ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4858/2017/டி2, நாள். 22.03.2018 அறிவுரையின் படி 4 தவணைகளாக வசூலிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 4 தவணைகளை முதல் தவணையாக ரூ.1500/– ஐ குடிநீர் இணைப்பு விண்ணப்பம் பெறும் போதும் மற்றும் மீதமுள்ள 3 தவணைகளை குடிநீர் இணைப்பு வழங்கிய ஒரு வருட காலத்திற்குள் வசூலிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.87/2016/இ2)

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான ஆவத்திபாளையம் தலைமை நீரேற்று நிலையம், கருமகவுண்டம்பாளையம் மற்றும் சந்தைபேட்டை நீரூந்து நிலையங்களில் உள்ள சம்ப்களிலும், (தொட்டி) மேலும் இந்நகராட்சி பகுதிகளில் 18 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் மற்றும் 1 தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றில் 15 நாட்களுக்கு ஒரு முறை சுத்தம் செய்ய 2018–19ம் ஆண்டிற்கு தேவைப்படும் பிளிச்சிங் பவுடர் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/– க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1183 /2018/இ2)

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்கு சம்மந்தமான வழக்கு W.P.No.7140/18 திரு.சதீஸ்குமார், 92.6, சங்ககிரி என்பவரின் மீது வழக்கு தொடர்வதற்கு வழக்கறிஞர் திரு.கோவிந்தசாமி என்பவருக்கு வழக்கு கட்டணம் தொகை ரூ.10,000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி வழக்கறிஞருக்கு பொதுநிதியில் இருந்து தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1184/2018/எச்1)